முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 796**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.12.2021, வெள்ளிக்கிழமை

1. ஓம் என்ற சக்தியே அரங்கா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த தேசிகா வாழ்க
ஆம் என்று உன்பால் சரணடைய
அகிலத்தையே மாற்றி அற்புதம் நிகழ்த்தும் அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள், 03.12.2021 வெள்ளிக்கிழமை)
வரமென நித்தம் நித்தம் உந்தனுக்கு
வடிவேலன் யான் சக்தி வழங்கி வர
3. வருகின்ற உன் தர்ம வழிகளை
வையகத்தில் ஆறுமுகன் காத்துவர
தருகின்ற உன் தொண்டர்களுக்கெல்லாம்
தண்டாயுதன் பெரும் பவம் கூட்டி வர
4. வருகவே உன் வழி வரும் மக்கள் மூலமே
வையகத்தை ஞானவழி நடத்திக் காப்பேன்
காப்பேன் உந்தன் அவதாரத்திற்காக
கலியுகத்தை ஞானயுகமாக மாற்றுவேன்
5. ஒப்புகொண்டு உன்னை உலகம் சரணடைய
இந்த உலகையே மாற்றம் செய்து அருள்புரிவேன்
அருள்பட அரங்கன் தர்மத்தை அகிலம் பின்பற்றி வருகவருக
பொருள்வளம் இயற்கைபலம் புண்ணியபலமும் கூடி இந்த உலகம்
6. உலகமே ஞான ஆளுமையை
உயர்வாக அரங்கன் உன் ஞானத்தால்
வலுவாக கண்டு கடைத்தேற நேரும்
வையகமே ஞானலோகமாற்றம் பெறும்
7. மாற்றம் தர வந்த கலியுகத்தின் சிறந்த ஞானி நீ
மக்களை காக்க வந்த மகாதவசி நீ
ஆற்றலை உலகோர் உணர்ந்தால் போதும்
அக்கணமே கலியுக மக்களெல்லாம்
8. மக்களெல்லாம் உன் வழி ஞானிகளாகி
மரணத்தை வென்று மறுமையும் போக்கி
தேக்கமின்றி ஆறுமுகன் என் தேடலில்
தெரிவிப்பேன் ஞானிகளாக சிறக்கக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—